பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 21 புதன்கிழமை 04.06.2025 கதிர் 200

## இது ரகசியம் அல்ல!

சங்கு - சைக்கிள் கூட்டணி உள்ளூராட்சி சபையில் ஆட்சியைப் பிடிப்பதற்கும் தமிழ் அரசுக் கட்சியை வீழ்த்துவதற்குமான கூட்டு. ஆனால் கொள்கைக்கூட்டுஎன்றுவழக்கம் 2

# சங்கு - சைக்கிள் ஏற்படுத்திய கூட்டால் தமிழ் அரசின் நிலைப்பாடு மாறாது

### அதன் செயலாளர் தெரிவிப்பு



உள்ளூராட்சிசபைகளில்அதிக ஆசனங்களைப் பெற்ற தமிழ் பேசும்கட்சிகள்ஆட்சியமைப்பதை ஏற்றுக்கொள்வது, ஆதரிப்பது என்கிற தமிழ் அரசின் கொள்கை முடிவில்எந்தமாற்றமும்இல்லை. அதனடிப்படையில் தமிழ் அரசுக் கட்சி அதிக ஆசனங்களைக் கொண்டுள்ளசபைகளில்எல்லாம் ஆட்சியமைக்கும் உரிமையை எமது கட்சி கோரும். அதனை ஆதரித்து நிற்கும் எந்தவொரு தமிழ் பேசும் கட்சியும் அதிக ஆசனங்களைக் கொண்டுள்ள சபைகளில் அந்தக் கட்சி ஆட்சியமைப்பதற்கும் தமிழ் அரசுக்கட்சி ஆதரவு தெரிவிக்கும். இந்த நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமும்கிடையாதுஎன்றுதமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணி (சங்கு)மற்றும் தமிழ்த் தேசியப்பேரவை(சைக்கிள்) 2

## வடக்கு கிழக்கு மாகாணங்களில் வீட்டுத் திட்ட நிதியை அதிகரிப்பதற்கு அனுமதி

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரால் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தில் வழங்கப்படும் நிதியின் அளவ தற்போதைய செலவு மதிப்பீட்டிற்கு ஏற்ப அதிகரிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 30 ஆண்டுகளாக நிலவிய மோதல் சூழ்நிலை காரணமாக குறித்த பிரதேசங்களில் வாழ்ந்த குடும்பங்களுக்குரிய பெருமளவான வீடுகள் சேதமடைந்தன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 2009 ஆண்டிலிருந்து இதுவரை 274,728 குடும்பங்களைச் சேர்ந்த 914,722 நபர்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர். 2024 ஆண்டின் இறுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 8 மாவட்டங்களில் 150,488 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

குறித்த வீடுகளை நிர்மாணிப்பதற்கு இலங்கை அரசு, இந்திய அரசு, அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் உள்ளிட்ட பிற அமைப்புகள் மூலம் நிதி

# அரச திணைக்களங்கள் நூதனமாக தமிழர் காணிகளை திருடுகின்றன

### நாடாளுமன்றில் ரவிகரன் விளாசல்

தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமிக்கும் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் போன்ற திருட்டுத் திணைக்களங்களில் உயர் அதிகாரிகள் நீதிபதிகளாக மாறிவிட்டனர். மாவட்ட செயலாளர் உட்பட, தமிழ் அதிகாரிகளையும் அதிகாரத்தோரணையில் அச்சுறுத்துகின்றனர்.சிலதிணைக்களங்கள் நூதனமானமுறையில் தமிழ் மக்களின் காணிகளைத்திருடிவருவதைஅவதானிக்க முடிகிறது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தரவு பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வனவளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியன நாட்டில் 2

## கிருஷாந்தி படுகொலை வழக்கின் குற்றவாளிகளது மனு நிராகரிப்பு

யாழ்ப்பாணத்தில் கிருஷாந்தி குமாரசாமி என்ற பாடசாலை மாணவியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்ததற்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரதிவாதிகள் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.

1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கிருஷாந்தி குமாரசாமி என்ற பாடசாலை மாணவியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்ததற்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ கோப்ரல் சோமரத்ன ராஜபக்சஉட்படஐந்துபிரதிவாதிகளும்தங்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை நிறைவேற்றாததால்தமக்குமன்னிப்புவழங்கிஅந்த தண்டனையை 20 ஆண்டுகளாகக் குறைத்துப் பரிசீலிக்க வேண்டும் என்றுதீர்ப்பளிக்குமாறு தாக்கல்செய்த அடிப்படை உரிமை மனுவை உயர் நீதிமன்றம் ஒருமனதாக தள்ளுபடி செய்துள்ளது. 2

## ஜேவிபியினர் முற்பிறவியில் வித்தைக்காரர்களா என்ன?

### நாடாளுமன்றத்தில் விளாசிய கபீர் ஹசிம் எம்பி

மக்கள் விடுதலை முன்னணியினர் முற்பிறவியில் வித்தைக்காரர்களாக இருந்திருப்பார்களா என்று தெரியவில்லை ஏனெனில் சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற் போல் (பல்டி) குத்துக்கரணம் அடிக்கிறார்கள். தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம்ஜனநாயகத்துக்குவிரோதமானதாக அமையும். என்று ஐக்கிய மக்கள் 8

# உள்நாட்டு சீனி, எதனோல் மீதான வரிகளை ஆளும்தரப்பு நீக்குமா?

### எதிர்க் கட்சித் தலைவர் நாடாளுமன்றில் கேள்வி

உள்நாட்டில்உற்பத்திசெய்யப்படும்சீனி மற்றும் எத்தனோல் மீது விதிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி காரணமாக தொழிற்சாலைகள்பெரும்நட்டத்தைஎதிர்கொண்டுள்ளன. எதிர்காலத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சீனி மற்றும் எத்தனோல் மீது விதிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரிகளை நீக்குவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்குமா என கேட்கிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்வி எழுப்பி உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

இலங்கையில் சீனி உற்பத்தி தொழில் நீண்டகாலமாக தேசிய வணிகத் தொழிலாக கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. இந்தத் தொழிலை நம்பி கிட்டத்தட்ட 8 250,000 குடும்பங்கள்வாழ்வாதாரம்

## ரஜ உப்பு என்ற பெயருக்குப் பதிலாக ஆனையிறவு உப்பு என மாற்றப்படும்

### அமைச்சர் ஹந்துனெத்தி நாடாளுமன்றில் தெரிவிப்பு

ஆனையிறவு உப்பள தொழிற்சாலையின் சேவையாளர்கள்முன்னெடுத்தபணிப்புறக்கணிப்பு போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனையிறவுஉப்பளத்தில் உற்பத்திசெய்யப்படும் உப்புக்கு 'ஆனையிறவு உப்பு' என்ற நாமத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுசெவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா 27/2 இன் கீழ், கடந்த அமர்வின் போது முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். 8

## மேலதிக சொலிசிஸ்டர் ஜெனரலுடன் தென்னக்கோன் நேற்று கடும் தர்க்கம்

உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பி சூரசேன தலைமையிலானகுழுவின்முன்னிலையில் ஆஜராகியிருந்தபொலிஸ்மாஅதிபர்தேசபந்து தென்னகோனுக்கும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிட்டர் ஜெனரால் ஜனாதிபதி சட்டத்தரணி திலிப பீரிஸிற்கும் இடையில் கடும் தர்க்கம் நிலவியது.

'தேசபந்துதென்னகோன்பாதாளகுழுவை காட்டிலும்பயங்கரமானவர், ஹரக்காட்டாவும் அச்சமடைவார்' என மேலதிக சொலிட்டர் ஜெனரால் ஜனாதிபதி சட்டத்தரணி திலிப பீரிஸ் குற்றஞ்சாட்டிய நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்த பொலிஸ்மா 2

## எஞ்சியுள்ள சபைகளிலும்கூட நிச்சயம் ஆட்சியமைப்போம்

### அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவிப்பு

கடந்த காலங்களில் பாம்பு - கீரி போன்று இருந்தவர்கள்உள்ளூராட்சிமன்றத்தேர்தலின் பின்னர்நண்பர்களாகியுள்ளார்கள். இவர்களின் உண்மைதன்மையைநாட்டுமக்கள்விளங்கிக் கொள்ள வேண்டும். மிகுதியாகவுள்ள உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளில் நிச்சயம்ஆட்சியமைப்போம். மக்களுக்கு 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

போலமக்களைஏமாற்றப்பார்க்கிறார்கள்என்று தொடக்கம் முதலே சொல்லி வருகின்றேன். வடிவேலுவின் கொண்டையை மறைக்க மறந்த நகைச்சுவையைப் போல, இதனை அவர்கள் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணியின் செயலாளர், இவர்தான் கஜேந்திரகுமாருடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர், வவுனியாவில் தமது உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மத்தியில் ஆற்றிய உரையில் மிகத் தெளிவாக இதனைத் தெரிவித்துள்ளார்.

“முதலில் நாம் தமிழ் அரசுக் கட்சியுடன் தான் பேச்சு நடத்தினோம். எனினும் எந்த விட்டுக்கொடுப்பையும் செய்வதற்கு அவர்கள் முன் வரவில்லை. ஒரு பெரிய தாய் கட்சி என்று சொல்லிக் கொள்கின்ற ஒரு கட்சி ஒரு சில இடங்களிலும் ஏனையோருக்கு விட்டுக்கொடுக்கும் மனநிலைக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை.

அந்த வகையில்தான் அவர்களுடன் பேச்சு நடத்திய அதைவேளை தமிழ் தேசிய பேரவையுடனும் பேச்சு நடத்தினோம். தமிழ் தேசிய பேரவையை பொறுத்த வரையில் சில சபைகளை பகிர்ந்து கொள்வதற்கும் எமக்கு சில சபைகளை விட்டுக் கொடுப்பதற்கும் முன்வந்திருந்தார்கள்.

அந்த வகையில் நாங்கள் அவர்களுடன் ஒரு உடன்படிக்கையை செய்திருக்கின்றோம். அரசியலில் நாங்கள் வெறுமனே உறுப்பினர்களாக இருந்துவிட்டு நான்கு வருடம் முடிந்ததன் பின்னர் எமது கட்சியின் இருப்பிடம் எங்கே என்று தெரியாத அளவுக்கு போய்விடுவோம். ஆகவே அரசியலில் இது சாதாரணமான விடயம்.

அதிகாரம் இருந்தால் மாத்திரமே ஓர் அரசியல் கட்சி ஈர்ப்புடன் இருக்க முடியும். ஆகவே நாங்கள் ஏனைய கட்சிகளுக்கு பெரும் மோசமான நிலையை ஏற்படுத்தாத வகையில் சாதகமான இடங்களில் ஆட்சி அமைப்பதற்கான செயற்பாடுகளை நாங்கள் செய்து இருக்கின்றோம். ஆகவே நாங்கள் சில சபைகளில் ஆட்சி அமைக்கலாமென எண்ணுகிறோம். வவுனியா மாநகர சபையிலும்ஜனநாயகதமிழ்தேசியக்கூட்டணி ஆட்சி அமைக்கும்“ எனத் தெரிவித்தார். ஆக மொத்தத்தில் இந்தக் கூட்டு உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்கான கூட்டே தவிர, கஜன்கள் அன்ட் கோ பித்தலாட்டம் காட்டுவது போல ஒரு கொள்கைக் கூட்டு அல்ல என்பதை அவர் தெட்டத் தெளிவாகத் தெரிவித்துள்ளார். இது இரு சந்தர்ப்பவாதக் கூட்டு மட்டுமே, இதற்கு நிலையானதோ நீடித்ததோ ஆயுள் ஏதும் இல்லை என்பது அவரது மறைமுகக் கருத்து.

தமிழ் அரசுக் கட்சி தனது நிலைப்பாட்டிலிருந்துவிலகவில்லைஎன்றால், இந்தக் கூட்டால் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை என்றால் அதன் ஆயுள் சில நாள்கள் அல்லது சில வாரங்களிலேயே -முடிந்துவிடும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம். ஏனெனில் இந்தக் கூட்டுக்குள் இருக்கும் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது தமிழ் அரசுக் கட்சி, தமிழ் அரசுக் கட்சி என்று உருகி வழிந்தார். அதற்குக் காரணம் இருக்கின்றது. அவருக்கு வவுனியா மற்றும் மன்னாரில் சபைகளில் ஆட்சியைப் பிடிக்க தமிழ் அரசுக் கட்சியைவிட்டால் வேறு வழியில்லை.

சுமந்திரன் மற்றும் கட்சித் தலைவர் சிவஞானம் ஆகியோர் மட்டக்களப்பில் இருந்தபோது அங்கு நேரில் சென்ற செல்வம் அடைக்கலநாதன், மன்னாரில் மாந்தை பிரதேச சபையில் இரண்டு வருட ஆட்சியைப் பகிர்ந்துகொள்வதற்கும் வவுனியாவில் தமது தரப்பு ஆட்சியை ஆதரிப்பதற்குமான இணக்கப்பாட்டை ஏற்படுத்தியிருந்தார். இப்போது சங்கு - சைக்கிள் கூட்டால் இந்தச் சபைகளுக்கும் ஆபத்து வந்துவிடப் போகிறதே என்பது அவரது அச்சம். அதனால்தான் அவர் தமிழ் அரசுக் கட்சியை தாஜா பண்ணப் பார்க்கிறார். அதேநேரம், தான் இருக்கும் கூட்டணியையும் நேரடியாகப் பகைத்துக்கொள்ள அவருக்குத் தற்றுணிபு கிடையாது என்பதால் முக்கித் தக்கிச் சமாளிக்கிறார்.

இதன் மூலம் அறியப்படும் வெளிப்படை உண்மை என்னவென்றால், தமிழ் அரசுக் கட்சிக்குப் பெரும்பாலான சபைகள் கிடைக்கின்றன, தமிழ் காங்கிரஸிற்கும் ரெலோவிற்கும் ஒரு சில சபைகளாவது கிடைக்கின்றன, ஆனால் புளொட் மற்றும் ஈபிஆர்எல்எவ் ஆகியவற்றுக்குத்தான் எந்தவொரு சபையும் கையில் இல்லை. அதனால்தான், காங்கிரஸுடன் கொள்கைக் கூட்டு என்று ஏமாற்றியாவது ஏதாவது ஒரு சபையில் அதிகாரத்தைப் பிடிக்க இந்த இரு கட்சிகளும் அவசர அவசரமாக ஒரு இணக்கத்திற்கு வந்திருக்கின்றன. காங்கிரஸையும் அதனோடு இணைந்துள்ள தமிழ் அரசிலிருந்து வெளியேற்றப்பட்டோர், கூட்டமைப்பிலிருந்துவெளியேற்றப்பட்டோரைப் பொறுத்தவரையிலும், தமிழ் அரசுக் கட்சியை வீழ்த்தினால் போதுமானது, அந்த ஒற்றைப் புள்ளியை முன்வைத்து ஈபிஆர்எல்எவ், புளொட்டுடன் சேர்வதற்கு அவை தயாராகின.

இதுதான் கட்சிகளுக்கு இடையிலான கணக்கு வழக்கும் அரசியலும். ஆனால், இவற்றையெல்லாம்மூடிமறைத்துபூசிமெழுகி தாம் தமிழ் மக்களுக்காக ஒரு கொள்கைக் கூட்டை உருவாக்குகிறார்கள் என்று மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். மக்கள் ஏமாளிகளாக இருந்தால் தலைவர்கள் ஏமாற்றி ஏமாற்றி தாம் வாழத்தான் பார்ப்பார்கள். அதிலென்ன சந்தேகம் இருக்கின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு முரணாக பொதுமக்களின் காணிகளைத் திருடிவருகின்றார்கள். பொதுமக்களின் குடியிருப்புக்காணிகளையும்அவர்களின்வயல் நிலங்களையும், வர்த்தமானி அறிவித்தல் முலம் சட்டத்திற்கு முரணானவகையில் வன ஒதுக்குப்பிரதேசங்களாக,தொல்லியல் ஒதுக்குப் பிரதேசங்களாக ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளார்கள்.

இதனால் இங்குள்ள மக்கள் தமது பூர்வீக குடியிருப்புக்களில் குடியிருக்க முடியாமல் வயல் நிலங்களில் பயிரிட முடியாமல் இத்திணைக்களங்களால் துரத்தியடிக்கப்படுகின்றார்கள். இதனால் அவர்களுடைய வாழ்வாதாரம், அவர்களுடைய அன்றாட உணவுத்தேவை, அவர்களுடைய பிள்ளைகள் கல்வி என்பன மறுக்கப்படுகின்றன.ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர்பிரிவிற்குட்பட்டதண்டுவான் கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஏ.சி.பாம் என்ற கிராமத்தில் 47குடும்பங்கள் வசித்துவந்த நிலையில்இ 1997இல் ஜெயசிக்குறு இராணுவ நடிக்கையின்மூலம் இவர்கள் இடம்பெயர்ந்தனர்.

இன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்வு நவடிக்கைகள்யாவும் பூர்த்தியடைந்து விட்டதாக கூறுப்படுகின்ற நிலையில்,இம்மக்கள்இன்னும்தங்கள்சொந்தக் கிராமத்தில் மீள்குடியேற்றப்படவில்லை. காரணம் கடந்த 2012ஆம் ஆண்டு இக்கிராமம் தண்டுவான் ஒதுக்கக்காடு என வனவளத் திணைக்களத்தால் சட்டத்திற்கு முரணாக வர்த்தமானிமூலம் அறிவிக்கப்பட்டிருக்கின்றமையாகும். ஒரு பிரதேசத்தைவனஒதுக்காகவர்த்தமானிமூலம் அறிவித்தல்செய்யும்முன்அதுபற்றிஅப்பிரதேச மக்களுக்கு பிரதேசசெயலாளர் ஊடாக அறிவிக்கவேண்டும். இது தொடர்பான கருத்துக்கள் மக்களிடம் பெறப்படவேண்டும். இவற்றுக்கெல்லாம்முரணாக,இவ்வாறெல்லாம் செய்யாமல் இப்பிரதேசம் தண்டுவான் வன ஒதுக்குப் பிரதேசமாக நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டவிதிகளுக்கு புறம்பாக வர்த்தமானப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திருட்டுத்திணைக்களம்இப்பிரதேசத்தை தண்டுவான் வனஒதுக்குப் பிரதேசமாக 2012இல் வர்த்தமாணி அறிவித்தல் நிவித்தல் செய்யும்முன்பு, 1979ஆம் ஆண்டில் இப்பிரதேசம் இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் அளவீடு செய்யப்பட்டு, எல்லைக் கற்கள் நாட்டப்பட்டு, நிலஅளவை வரைபடம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. ரொப் ஒவ் பிபி 66 என்ற வரைபடத்தொகுதியினுள் இவ்வரைபடம் உள்ளது.

இந்தக் கிராமத்தைத் திட்டமிட்டு திருடும்போது வனவளத்திணைக்களத்திற்கு இது தெரிந்திருக்கவில்லை. இதேபோலத்தான் சட்டத்திற்கு முரணாக வனவளத் திணைக்களம் தமிழ்மக்களின் காணிளை வனஒதுக்குப் பகுதியாக வர்த்தமானிமூலம் அறிவித்துவருகின்றார்கள். ஒதுக்காட்டில் அமைந்துள்ள அமைந்துள்ள சித்தாத்தன் குளம் எனப்படும் தமிழ்மக்களின் பூர்வீக விவசாயநிலங்களை விடுவிக்க வனவளத் திணைக் களம் இதுவரை இணங்கவில்லை. வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவில்இ வனஒதுக்கு பிரதேசங்களை சிங்களமக்களைமட்டுமே கொண்டகுடியேற்றத்திட்டமானபோகஸ்வெவ உருவாக்குவதற்காக 2000 ஏக்கருக்கும் மேற்பட்டகாணிகளைவனவளத்திணைக்களம் விடுவித்துள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் பிரிவின் அம்பகாமம் பகுதியில் இலங்கை விமானப்படையின் விமானப்படைத்தளம் அமைப்பதற்குஇ ஒதுக்கப்பட்ட வனப்பகுதியிலிருந்து 8000ஏக்கர் வனப்பகுதிகள் துப்பரவு செய்யப்பட்டுள்ளன. வனவளத்திணைக்களத்தின் அனுமதி இன்றி, குறித்த சட்ட ஏற்பாடுகள் எவற்றையும் பின்பற்றாது இந்த அடர்வனப்பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளதுடன், இங்குள்ள பெறுமதியான மரங்கள் இரகசியமான விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஊழலுக்கு எதிரான கோசத்துடன் ஆட்சிக்கு வந்துள்ள அரசு இதுதொடர்பில் வெளிப்படையான விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்.

வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் போன்ற திருட்டுத் திணைக்களங்களில் உயர் அதிகாரிகள் நீதிபதிகளாக மாறிவிட்டனர். வடக்கு மாகாணத்திலுள்ள மாவட்டச் செயலகங்கள்தோறும் வன ஒதுக்குப் பிரதேசங்களை விடுவிப்பதாகக்கூறி விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள். திருடனே களவை விசாரிக்கும் நகைப்பிற்கிடமான இந்த நீதி வழங்கும் பொறிமுறை உழலுக்கு எதிரான கோசத்துடன் ஆட்சிபீடம்ஏறிய இந்த அரசுக்கு பேரவமானம்.

விசாரணை மேற்கொள்ள வரும் அதிகாரிகள் கடந்தகால ஆளும்தரப்புகளின் காலத்தில் ஊழலில் மூழ்கித் திளைத்தவர்கள் இவர்கள் இங்குள்ள ஒதுக்கு வனப்பகுதிகளை விடுவிப்பது தொடர்பில் பொய்யான தகவல்களை அரசிற்கு வழங்குதுடன், மாவட்டசெயலாளர் உட்பட, தமிழ் அதிகாரிகளையும் இப்பொய்த் தகவல்களை ஏற்றுக்கொள்ளும்படி மிரட்டியும்வருகின்றனர்.

கடந்த 2023.06.01இல் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர், வனவளத் திணைக்களத்தின் அதிகாரிகள் ஆகியோருடன் வனவளப்பகுதிகளை விடுவிப்பதாகக்கூறி கூட்டமொன்றை ஏற்படுத்திய வனவள மற்றும், வனஜீவராசிகள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி சமந்தி,வனவள மற்றும், வனஜீவராசிகள் திணைக்களத்தின் முறையற்ற தீர்மானங்கள் சிலவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தியதுடன், அத்தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் ஒரு அங்குலம் நிலத்தைக்கூட விடுவிக்க முடியாதென அச்சுறுத்தியுள்ளார்டந்த ஆளும்தரப்புகளின் காலத்தில்கடமையாற்றிய இவர்களைப்போன்ற அதிகாரிகளை இந்த ஆளும்தரப்பு எச்சரிக்கையுடன்கையாளவேண்டும்என்றார்.

## வெளிநாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மனு இன்று குமுதுனி விக்ரமசிங்க, அச்சல வெங்கப்புலி மற்றும் மேனகா விஜேசுந்தர ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு முன் அழைக்கப்பட்டிருந்தது.

இந்த மனு பரிசீலிக்கப்பட்டபோது, பதிலளிப்பவர்களாக பெயரிடப்பட்ட நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, சிறைச்சாலைகள் ஆணையர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சிரேஸ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மாலி கருணாநாயக்க ஆகியோர் ஆரம்ப ஆட்சேபனைகளை எழுப்பினர்.

அந்த முதற்கட்ட ஆட்சேபனைகளுக்கு பதிலளிக்கும் விதமாக, மனுவை பராமரிக்க முடியாது என்று சிரேஸ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வாதிட்டார்.

உரிய சட்ட காலம் முடிந்த பிறகு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் சமர்ப்பணங்களை முன்வைத்த சிரேஸ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல், அரசமைப்பின் படி, நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்ட நபர்களுக்கு மன்னிப்பு வழங்குவது ஜனாதிபதியின் முழுமையான உரிமை என்றும், அத்தகைய மன்னிப்பைக் கோர மனுதாரர்களுக்கு எந்தச் சட்டப்பூர்வ உரிமையும் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை கருத்தில் கொண்டு, மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு, குறித்த மனுவைவிசாரணைக்குஎடுத்துக்கொள்ளாமல் தள்ளுபடிசெய்ய ஒருமனதாக முடிவு செய்தது.

1998 ஆம் ஆண்டு கொழும்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் அமர்வால் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்ட தமக்கு, அந்த நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டதாக மனுதாரர்கள் கூறுகின்றனர்.

இருப்பினும், ஆளும்தரப்பு எடுத்த கொள்கை முடிவு காரணமாகத் தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வேண்டாம் என்று ஆளும்தரப்பு முடிவு செய்துள்ளதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தாம் நீண்ட காலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தங்கள் மனுக்களில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அதன்படி, தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை 20 ஆண்டுகள் சிறைத்தண்டனையாக மாற்றி, 1998 முதல் அதை அமுல்படுத்த உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர்கள் நீதிமன்றத்தை கோரியிருந்தனர்.

மேலும், தண்டனை அமுல்படுத்தப்படாவிட்டால், ஜனாதிபதி தங்களுக்கு மன்னிப்புவழங்குவது குறித்துபரிசீலிக்குமாறு உத்தரவிட வேண்டும் என்றும் மனுதாரர்கள் மேலும் கோரியிருந்தனர்.

## சீனி மோசடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிய வாக்குறுதிகளை முறையாக நிறைவேற்றுவோம்எனபெருந்தோட்டத்துறை மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசநிர்வாகக் கட்டமைப்பில் காணப்படும் குறைப்பாடுகளுக்கு பல்வேறு காரணிகள் செல்வாக்குசெலுத்துகின்றன.கடந்தகாலங்களில் அரசியல் பரிந்துரைகளுடன் அரசியல் நியமனங்கள் வழங்கப்பட்டன.இதனால் முழு அரசநிர்வாககட்டமைப்பும்பலவீனமடைந்தது.

தகுதி மற்றும் போட்டி பரீட்சை ஊடாக மாத்திரம் அரசசேவைக்கு புதிய நியமனங்கள் இனி வழங்கப்படும் . 30 ஆயிரம் அரச நியமனங்களைவழங்குவதற்குவரவுசெலவுத் திட்டத்தின்ஊடாகமானியம்ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியதுறைகளுக்கு15ஆயிரம்பேரை முதற்கட்டமாக இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டு மக்களின் தனிப்பட்ட விடயங்கள் பற்றி பேசுவதற்கு அரசாங்கத்துக்கு தார்மீக உரிமை இல்லை என்று தற்போது முதலை கண்ணீர் வடிப்பவர்கள் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியை மறந்து விட்டார்கள்.நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளி மக்களின் தனிப்பட்ட வாழ்க்கையை இல்லாதொழித்தவர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் எமக்கு கிடையாது.

கடந்த காலங்களில் பாம்பு - கீரி போன்று இருந்தவர்கள்உள்ளூராட்சிமன்றத்தேர்தலின் பின்னர்நண்பர்களாகியுள்ளார்கள்.இவர்களின் உண்மைதன்மையைநாட்டுமக்கள்விளங்கிக் கொள்ள வேண்டும். மிகுதியாகவுள்ள உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளில் நிச்சயம் ஆட்சியமைப்போம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முறையாக நிறைவேற்றுவோம் என்றார்.

## ஆஸி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் தேசபந்து தென்னகோன் ‘இவர் என்னை மிகவும் கீழ்த்தரமான முறையில் இந்த குழுவிலும், மாத்தறை நீதவான் நீதிமன்றத்திலும் பேசுகிறார், அவசியமாயின் எனக்கும் இவரை பற்றி குறிப்பிட முடியும்‘ என்று குழுவின் முன்னிலையில் குறிப்பிட்டார்.

பிரதிவாதியான தேசபந்து தென்னகோன் மாத்தறைநீதிமன்றத்தில்முன்னிலையாகாமல் தலைமறைவாக இருந்ததாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிட்டர் ஜெனரால் ஜனாதிபதி சட்டத்தரணி திலிப பீரிஸ் குற்றச்சாட்டை முன்வைத்த போது, இதற்கு பதிலளித்த பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் சார்பில் குழுவில் முன்னிலையான சட்டத்தரணி சஞ்சய வீரவிக்கிரம இந்த குற்றச்சாட்டை தாம் நிராகரிப்பதாக குறிப்பிட்டா

பொலிஸ்மாஅதிபர்தேசபந்துதென்னகோன் பதவிக்கான அதிகாரத்தை முறைக்கேடாக பயன்படுத்தியமைமற்றும்அவரதுதுர்நடத்தை

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி ஜேர்மனி தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு அங்கீகாரம் வேண்டும்

## சிறீதரன் எம்.பி. கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவரும் இலங்கை ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனம் இன்றுவரை இலங்கை அரச வர்த்தமானி மூலம் அங்கீகரிக்கப்படவில்லை. இந்நிறுவனம் தொடர்ந்தும் இந்த மாவட்டத்தில் சுயாதீனமாகவும், தனித்தன்மையோடு இயங்குவதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், முறைப்படுத்தப்பட்ட சுயாதீன நிர்வாக கட்டமைப்பை உருவாக்குவதற்கும் ஆவனசெய்யுமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பிரதமரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின் போது நிலையியல் கட்டளை 27/ 2 .இன் கீழ் பிரதமரிடம் கேள்விகளை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவரும் இலங்கை ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனம் இன்றுவரை இலங்கை அரச வர்த்தமானி மூலம் அங்கீகரிக்கப்படவில்லை. இந்த நிறுவனம் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட போது 96 பேராக இருந்த நிரந்தர பணியாளர் எண்ணிக்கை தற்போது 77 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டு முதல் இன்றுவரை எந்தவொரு நிரந்தரப் பணியாளரும் நியமிக்கப்படாத, ஆளணித் தேவைப்பாட்டின் 24 வீதம் மட்டுமே தற்போது நிரப்பப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் 2016- 2020 வரை தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் கீழ் (NAITA)) இயங்கிவந்த நிலையில், தற்போதும் இதனை ஓர் சுயாதீன நிறுவனமாக இயங்கவிடாது CGPTI நிறுவனத்தின் கிளை நிறுவனமாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது பயிற்சிநெறிகளை முறைமைப்படுத்துவதிலும், அவற்றுக்கான சான்றிதழ்களை குறித்த காலப்பகுதியில் வழங்குவதிலும் நிருவாக இடர்பாடுகளை தோற்றுவிக்கும் என்பதால், அது நிறுவனம் மீதான அபிமானத்தை பாதிப்பதாகவே அமையும்.

றீஸிறூவீணுணு நிறுவனத்தின் முதல்வரும், துணை முதல்வரும் (NAITA) நிறுவனத்தின் பணியாளர் தொகுதியிலிருந்து தெரிவுசெய்யப்பட்டு ஒப்பந்த அடிப்படையிலேயே நியமிக்கப்படுவதால், அந்த நியமனங்களின்போது உரிய தகைமைகளோ, ஆளுமைத்திறனோ கருத்திற்கொள்ளப்படாமை நிறுவனத்தின் நிர்வாக ஆளுமையையும் சுயாதீன இயங்குநிலையையும் மிக மோசமாக பாதிப்படையச் செய்கிறது.

கொழும்பு மாவட்டத்தில் இயங்கிவருகின்ற ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனம் சர்வதேச தரத்திலான பயிற்சிநெறிகளையும், சான்றிதழ்களையும் வழங்குகின்ற உயர்தர நிறுவனமாக உள்ளபோதும், போரின் பாதிப்புகளை எதிர்கொண்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட இளைஞர், யுவதிகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்பயற்சி நிறுவனம் வளப்பற்றாக்குறைகளுடனேயே தொடர்ச்சியாக இயங்கி வருகிறது. யாரை இலக்குவைத்து இந்நிறுவனம் ஜேர்மன் அரசால் ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த இலக்குக் குழு நிராகரிக்கப்பட்டு வேறு பிரதேசங்களைச் சார்ந்தவர்களே இந்நிறுவனத்தின் மூலம் தொழிற்கல்வியை நுகரக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டுள்ள அதேவேளை, இந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் முன்னுரிமை வழங்கப் படாமையும் இந் நிறுவனத்தின் பின்னடைவுக்கு ஒரு காரணமாகும்.

2021ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மாணவர் விடுதி நிர்மாணப் பணிகள், உரிய நிதி ஒதுக்கிடின்மையால் இன்றளவும் முழுமைப்படுத்தப்படவில்லை. தற்போது 180 வரையான மாணவர்கள் அந்த விடுதிக் கட்டடத்திலேயே தங்கவைக்கப்பட்டுள்ள நிலையில், மாணவர்களது பாதுகாப்பை உறுதிசெய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. ஆளணிப் பற்றாக்குறைக்கான உடனடித் தீர்வாக, சகோதர மொழி தெரியாத தமிழ், சிங்கள பயிற்சி ஆசிரியர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அது பிற மொழி பேசும் மாணவர்களிடையே பாடங்களில் புரிதலற்ற தன்மையையும், கற்கைநெறியில் திருப்தியினங்களையும் ஏற்படுத்தியுள்ளதுடன், அதன் காரணமாக சில மாணவர்கள் கற்கைநெறியைக் கைவிட்டு வெளியேறும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன.

கடந்த 2025.04.29 ஆம் திகதியன்று றீஸிறூணுவீணு நிறுவனத்தில் நடைபெற்ற புத்தாண்டு நிகழ்வுகளின் போது, முறையான மேலாண்மை இன்மையால் ஏற்பட்ட உள்ளக முரண்பாடுகள், இனரீதியான மோதல்களாக மடைமாற்றப்பட்டு, ஸீறூவீவீணு நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட ஆசிரியர் ஒருவரால் தமிழ் மாணவர்கள் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி விடயங்கள் சார்ந்து தங்களின் உயரிய கரிசனையைக் கோருவதோடு, இந்நிறுவனத்தின் செயற்பாடுகளும், சேவையும் எமது மாவட்டத்திற்கு தேவையாக உள்ள நிலையையும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட இளைஞர், யுவதிகளின் தொழிற்திறன் விருத்தி கருதியும் வளத்திலும், தரத்திலும் மிகவும் தாழ்நிலையிலுள்ள கிளிநொச்சி மாவட்ட றீஸிறூனி நிறுவனத்தை அங்கீகரிப்பதற்கான அரச வர்த்தமானியை விரைவாக வெளியீடு செய்வதற்கும். இந்நிறுவனம் தொடர்ந்தும் இந்த மாவட்டத்தில் சுயாதீனமாகவும், தனித்தன்மையோடும் இயங்குவதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், முறைமைப்படுத்தப்பட்ட சுயாதீன நிர்வாக கட்டமைப்பை உருவாக்குவதற்கும் ஆவன செய்யுமாறு தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

## மின்சார சட்டமூலத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல்

இலங்கை மின்சாரம் (திருத்தம்)' சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவொன்றின் பிரதி கிடைத்துள்ளதாக சபாநாயகர் ஜெகத் விக்கிரமரத்ன நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார்

நாடாளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியது. அறிவிப்பு வேளையின்போது சபாநாயகர் இதனை அறிவித்தார்.

அரசமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'இலங்கை மின்சாரம் (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றின் பிரதி எனக்கு கிடைக்கப் பெற்றுள்ளது என்றார் அவர்.

## மின்சார சபைக்கு புதிய தலைவர்

இலங்கை மின்சார சபையின் புதிய தலைவராக பொறியியலாளர் பேராசிரியர் ஹேமபால நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் கடிதத் தலைப்பின் கீழ் இந்த நியமனம் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் வலுசக்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஆவார். இதற்கிடையில், இலங்கை மின்சார சபையின் தலைவராக இதுவரை பணியாற்றி வந்த பொறியியலாளர் கலாநிதி டி.ஜே.டி. சியம்பலாபிட்டியவின் ராஜினாமா உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மருந்துக் கொள்வனவுக்கு அமைச்சரவைப் பத்திரம்

அரசுகளுக்கு இடையிலான கொள்கைத் திட்டத்தின் கீழ் மருந்து கொள்வனவுக்கு அமைச்சரவையின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், சீனா, தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளிடமிருந்து மருந்துக் கொள்வனவு செய்வதற்கு வெளிவிவகாரத்துறை அமைச்சின் ஊடாக தூதரக மற்றும் உயர்ஆணையரகம் மட்டத்தில் ஆரம்பக்கட்ட பேச்சு நடத்தப்பட்டது என்று சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின் போது 27/ 2 இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுகளுக்கு இடையிலான கொள்கைத்திட்டத்தின் கீழ் மருந்து கொள்வனவுக்கு அமைச்சரவையின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தியா, பங்களாதேஸ், பாகிஸ்தான், சீனா, தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளிடமிருந்து மருந்து கொள்வனவு செய்வதற்கு அயலுறவுத்துறை அமைச்சின் ஊடாக தூதரக மற்றும் உயர்ஆணையரக மட்டத்தில் ஆரம்பக்கட்ட பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

உயிர் காக்கும் மருந்துகள் மற்றும் அத்தியாவசிய மருந்துகளை முதல் கட்டமாக இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மருந்துத் தட்டுப்பாடு குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மத்திய மருந்துக் களஞ்சியசாலை, பிராந்திய மருந்துக் களஞ்சியசாலைகளின் மருந்துக் கையிருப்பு மற்றும் விநியோகம் நாளாந்தம் தரவு கட்டமைப்பின் அடிப்படையில் ஆராயப்படுகிறது.

மருந்து இறக்குமதியினால் தேசிய மருந்து உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று முன்வைக்கப்பட்டுள்ள கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. தேசிய மட்டத்திலான மருந்து உற்பத்திக்கு பாதிப்பு ஏற்படாத வகையில்தான் மருந்து இறக்குமதி செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தேசிய மருந்து உற்பத்தியாளர்களை வலுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பகிரங்க விலைமனுகோரல் ஊடாகவே மருந்துகள் கொள்வனவு செய்யப்படும். இதற்காக நிதியமைச்சு, சுகாதார அமைச்சு, கைத்தொழில் அமைச்சு, வர்த்தகத்துறை அமைச்சு மற்றும் அயலுறவுத்துறை அமைச்சு ஆகிய அமைச்சுக்களை உள்ளடக்கிய வகையில் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் அதிகாரிகளும் உள்ளடங்குகிறார்கள். ஆகவே ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாகவே மருந்துகள் கொள்வனவு செய்யப்படும் என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தொடர்ந்து ஏமாற்றப்படும் தோட்டத் தொழிலாளர்கள்

**நாடெங்கிலும் வறுமையிலும், வாடையிலும் வாழும் மக்களுள் முக்கியமான தருணத்தில் இடம் பிடிப்பவர்கள் தோட்டத் தொழிலாளர்கள். அவர்கள், பன்னெடுங்காலமாக, தேயிலைத் தோட்டங்களில் கடுமையான உழைப்பைச் செய்தும், தங்களுக்குரிய தக்க ஊதியத்தையும் உரிமைகளையும் பெறாமல் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர்.**

**அவர்கள் பெரும்பாலும் மலையகப் பகுதியில் வாழ்பவர்கள். காலநிலை, குடியிருப்புகள், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளிலும் வெகு பின்னிலைப்படுத்தப்பட்டவர்களே. இதனிடையே, அவர்களின் தினசரி சம்பளத்தை ரூ.1700 ஆக உயர்த்துவதற்கான சமீபத்திய அரச முடிவு, ஒரு வரலாற்றுச் சாதனையாகக் கருதப்படலாம்.**

**முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் நேரடி தலையீட்டால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது, தோட்டத் தொழிலாளர்கள் நீண்ட காலமாக முன்னிறுத்தி வந்த கோரிக்கைக்கு கிடைத்த பதிலாகவும், அவர்களின் சமூகநீதிக்கான போராட்டத்திற்குகிடைத்த வெற்றியென்றும் கூறலாம்.**

**ஆனால், வெறும் அறிவிப்புகள் மட்டும் போதாது. இந்த சம்பள உயர்வு நடைமுறையில் உறுதியாக அமல்படுத்தப்பட வேண்டியது அவசியம். கடந்த காலங்களில் பல்வேறு சம்பள உயர்வு அறிவிப்புகள் தொழில் அதிபர்களின் எதிர்ப்பால் கான்வரிப்புகள் இல்லாமல் நிறைவற்ற முயற்சிகளாகி விட்டன. இதுவும் அப்படி ஆகக் கூடாது.**

**மேலும், இந்த உயர்வு நாளாந்த வாழ்கையில் அவர்கள் சந்திக்கும் உண்மையான செலவுகளைப் பொருட்படுத்தும் அளவில் போதுமானதா என்றதும் ஆய்வுக்குரியகேள்வியாகும். உணவுப்பொருட்களின் விலை, வீட்டு வாடகை, குழந்தைகளின் கல்விச்செலவு, மருத்துவப் பாவனை என அனைத்தையும் கணக்கில் எடுத்தால் ரூ.1700 என்பது அடிப்படை தேவைகளை மீட்டும் ஒரு தற்காலிக நிவாரணம்தான்.**

**இதனைத் தொடர்ந்து, நிரந்தர சம்பள கொள்கை, வாழ்க்கைத் தர மேம்பாடு, பூரண குடியிருப்பு திட்டங்கள், கல்வி நலவழிகள் போன்ற பல்வேறு திட்டங்களும் ஆளும்தரப்பால் தயாரிக்கப்பட வேண்டும்.**

**தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளும் வாழ்க்கைத்தரமும்ஏற்கனவேபலநூற்றாண்டுகளாக புறக்கணிக்கப்பட்டது போதும். இப்போது நேர்மறையான மாற்றத்திற்கு அரசாங்கமும், தொழிற்சங்கங்களும், தோட்ட மேலாளர்களும் இணைந்து செயல் படவேண்டும்.**

**தோட்டத்தொழிலாளர்களின்உழைப்பும், தியாகமும் தேசிய வருமானத்தில் பெரும் பங்கு வகிக்கின்றது என்பதை ஒருபோதும் மறக்க முடியாது. அந்த உழைப்புக்கு நிகரான மரியாதையை கொடுக்கும் வழியேசமூகநீதிக்கானஉண்மையானபாதையாகும்.**

## தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு குறித்த ஆளும் தரப்பின் கொள்கை என்ன?

*நாட்டு மக்களின் தனிப்பட்ட விடயங்கள் மற்றும் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு தொடர்பில் பேசுவற்கு இந்த ஆளும்தரப்புக்கு தார்மீக உரிமை உள்ளதா, தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டத்தின் ஊடாக தரவுகள் இந்தியாவுக்கு செல்வதாக கடந்த காலங்களில் குறிப்பிட்டீர்கள். தற்போதும் இந்த நிலைப்பாட்டிலேயே உள்ளீர்களா அல்லது ஆட்சிக்கு வந்தவுடன் கொள்கையை மாற்றிக் கொண்டீர்களா என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஆளும் தரப்பிடம் கேள்வியெழுப்பினார்.*

*நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைக் கேட்டார். அவர் தனது கேள்வியில் மேலும் தெரிவித்ததாவது:*

*தனிநபர் தரவு பாதுகாப்பு சட்டத்துக்கு திருத்தம் கொண்டு வருவது மிகவும் முக்கியமானது. தரவு பாதுகாப்பு முகவராண்மையை பல மாதங்களுக்கு முன்னர் நிறுவியிருக்க வேண்டும். இருப்பினும் துரதிஷ்டவசமாக இன்றும் இந்த முகவராண்மை நிறுவப்படவில்லை.*

*இந்த முகவர் நிறுவனத்துக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஆளும்தரப்பு மந்தகரமான நிலையில் செயற்படுகிறது. இதனால் அரச டிஜிட்டல் கட்டமைப்பு பின்னடைவையே எதிர்கொள்கிறது. மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான இந்த ஆளும்தரப்பு இந்த சட்ட திருத்தத்தை கொண்டு வந்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.*

*தரவு பாதுகாப்பு தொடர்பான சட்டமூலத்தை நான் ஆரம்பத்தில் கொண்டு வந்த போது மக்கள் விடுதலை முன்னணியினர் அந்த சட்டமூலத்தின் உள்ளடக்கத்தை ஆராயாமல் கடுமையாக விமர்சித்தார்கள். ஆனால் இன்று அவர்களே சட்ட திருத்தத்தை கொண்டு வந்துள்ளார்கள். நாட்டு மக்களின் தனிப்பட்ட விடயங்கள் மற்றும் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு தொடர்பில் பேசுவற்கு இந்த ஆளும்தரப்புக்கு தார்மீக உரிமை உள்ளதா?*

*தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகளின் தனிப்பட்ட விடயங்கள் அவர்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் வீட்டில் வளர்க்கும் செல்ல பிரயாணிகள் என அனைத்து விடயங்களையும் தேர்தல் பிரச்சாரத்துக்கு பயன்படுத்தினீர்கள். ஜனாதிபதி நிதியத்தின் நிதி பெற்றுக்கொண்டவர்களின் தனிப்பட்ட விடயங்கள் பற்றிப் பேசினீர்கள்.*

*தனிப்பட்ட தரவுகள் முறையாக ஒழுங்குப்படுத்தப்பட வேண்டும். அரசமற்றும் தனியார் நிறுவனங்களுக்கு தனிப்பட்ட தரவுகளை தமது விருப்பத்துக்கு அமைய நிர்வகிக்க முடியாது. டிஜிட்டல் அடையாள அட்டை பற்றி பேசப்படுகிறது. இதற்கான நடவடிக்கைகளைநாங்கள் முன்னெடுத்தோம். இருப்பினும் ஆட்சி மாற்றத்தால் அந்த திட்டம் நிறைவேறவில்லை. டிஜிட்டல் அடையாள அட்டை உருவாக்கத்துக்கு என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்கள்?*

*அரச சேவையாளர்களை திருடர்கள் என்றும் விமர்சிக்கும் நிலைக்கு ஆளும்தரப்பு தள்ளியுள்ளது. விமர்சனங்களை மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருக்காமல் டிஜிட்டல் மயமாக்கலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் அதற்கான ஒத்துழைப்பை நாங்கள் வழங்குகிறோம். தரவு பாதுகாப்பு சட்டத்தால் தனிப்பட்ட தரவுகள் இந்தியாவுக்கு செல்லும் என்று கடந்த காலங்களில் குறிப்பிட்டீர்கள். இந்த குற்றச்சாட்டை தற்போது உங்களால் ஏற்றுக் கொள்ள முடியுமா என்றார்.*

## சைபர் பாதுகாப்பு சட்டமூலத்தை விரைவில் சமர்ப்பிக்க வலியுறுத்து

*சைபர் பாதுகாப்பு என்பது பாதுகாப்பு அம்சத்துடன் மாத்திரம் தொடர்புப்பட்டதல்ல, நாட்டின் பொருளாதார விடயங்களுடன் தொடர்புடையது.சைபர் பாதுகாப்பு சட்டமூலத்தை வெகுவிரைவில் சபைக்கு சமர்ப்பிக்குமாறு நீதியமைச்சரிடம் வலியுறுத்துகிறேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.*

*நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற தரவு பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:*

*2022 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கது. ஏன் சைபர் பாதுகாப்பு சட்ட வரைவு குறித்து கவனம் செலுத்தப்படவில்லை.சைபர்பாதுகாப்பு என்பது பாதுகாப்பு அம்சத்துடன் மாத்திரம் தொடர்புப்பட்டதல்ல, நாட்டின் பொருளாதார விடயங்களுடன் தொடர்புடையது.*

*நல்லாட்சி ஆளும்தரப்பின் இறுதிக் காலப்பகுதியில் சைபர் பாதுகாப்பு சட்ட வரைவு தயாரிக்கப்பட்டது. இருப்பினும் இந்தச் சட்ட வரைவின் உள்ளடக்கங்கள் தற்போதைய பூகோள காரணிகளுக்கு முழுமையாக அமையாது. ஆகவே புதிய விடயங்களுடன் சைபர் பாதுகாப்பு சட்டவரைவினை தயாரித்து, சட்டமூலத்தை சபைக்கு சமர்ப்பிக்குமாறு நீதியமைச்சிடம் வலியுறுத்துகிறேன்.*

*சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச் ) சட்டமூலத்தில் ஒருசில குறைபாடுகள் இருப்பதை அவதானிக்க முடிகிறது. சட்டமூலத்தின் 13 ஆவது பிரிவில் 'தரவு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது அரச கூட்டுத்தாபனம் மற்றும் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் உள்ளடங்க கூடாது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

*தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டத்தின் செயல்திறனை வினைத்திறனாக்க வேண்டுமாயின் அரச கூட்டுத்தாபனங்கள் நிறுவன கட்டமைப்பின் அடிப்படையில் உள்ளடக்கப்பட வேண்டும் . ஆகவே இந்த விடயத்தை திருத்தத்துக்குள் உள்வாங்குமாறு வலியுறுத்துகிறோம் என்றார்.*

# சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ். பண்ணையில் துப்புரவு

(படம் உண்டு)

உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு பிளாஸ்டிக் மூலம் ஏற்படும் மாசை இல்லாது ஒழிப்போம் எனும் 2025 ஆம் ஆண்டிற்கான சுற்றாடல் தொனிப்பொருளுக்கு அமைவாக சுற்றாடல் வாரமானது மே 30 ஆம் திகதி முதல் யூன் மாதம் 5 ஆம் திகதி வரை கொண்டாடப்படுகிறது.இதனடிப்படையில் யாழ் பண்ணை கடற்கரை சுத்தப்படுத்தும் நிகழ்வு யாழ் மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் காலை 6:45 மணி முதல் காலை 8:30 மணிவரை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ் மாவட்ட உதவி பணிப்பாளர் தவகிருபா தலைமையில் இடம்பெற்றது.

இதன்பொழுது பண்ணை கடற்கரை வளாகத்தில் காணப்பட்ட கழிவுகள் தரம்பிரிக்கபட்டு தூய்மை படுத்தல் பணிகள் முன்னெடுக்கப்பட்டது .நிகழ்வின் பிரதம அதிதியாக யாழ் மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் , அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் யாழ் மாவட்ட பிரதி பணிப்பாளர் சூரியராஜா , யாழ் மாவட்ட விசேட அதிரடிப் படை பொறுப்பதிகாரி டி.எல் .இகலகமகே , மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் , யாழ் பொலிஸ் நிலைய சுற்றாடல் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள், கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினர் ,கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள்,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாநகர சபை ஊழியர்கள் , உத்தியோகத்தர்கள், சுற்று சூழல் தன்னார்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







# செம்மணியில் நேற்றும் அகழ்வுப் பணி தொடர்வு

அரியாலை - செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான பகுதியில் இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் நாள் அகழ்வு பணி இன்று முன்னெடுக்கப்பட்டது.

அரியாலை - செம்மணி சித்துபாத்தி மாயானத்தில் எழு மனித மண்டையோடு உள்ளிட்ட உடலங்களின் பாகங்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி - சித்துபாத்தி மயானத்தில், கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக குழிகள் வெட்டப்பட்டபோது அதற்குள் இருந்து மனித என்புச் சிதிலங்கள் அவதானிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து சம்பவ இடத்தில் நீதவான் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார். இதன்போது, மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியை ஸ்கான் ஆய்வுக்கு உட்படுத்தவும், தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு இரண்டு உடலங்களின் பாகங்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக அகழ்வு பணிகள் நிறுத்தப்பட்டிருந்தது.

குறித்த அகழ்வு பணிகள் நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பமான நிலையில் குறித்த பகுதியில் மேலும் ஐந்து மனித உடலங்களின் பாகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் தொடர்ந்து வரும் நாட்களில் அகழ்வு பணிகள் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.















## ஐக்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய காரணிகளை உள்ளடக்கிய வகையில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து விதப்புரைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு குழு நேற்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் கூடியது.

குழுவின் தலைவர் உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பி சூரசேன, நீதியரசர் (ஓய்வுநிலை) என்.பி. இத்தவெல, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் லலித் ஏக்கநாயக்க ஆகியோர் தலைமையில் குழு கூடியது

இதன்போது மாத்தறை வெலிகம துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துக்குரிய 31 சாட்சியாளர்களில் 1 முதல் 22 வரையான சாட்சியங்களை குழுவிற்கும் மற்றும் பிரதிவாதியான பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தரப்புக்கும் வழங்குவதற்கும் உரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி சட்டத்தரணி திலிப பீரிஸ் மேற்கொண்டிருந்தார்.

கடந்த அமர்வின் போது தான் குறிப்பிட்ட ஒரு விடயத்தை ஊடகம் ஒன்று திரிபுப்படுத்தி செய்தி வெளியிட்டுள்ளது. இதனூடான தனக்கும், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க ஒரு தரப்பு முயற்சிப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் குழுவின் முன்னிலையில் குறிப்பிட்டார்.

தடுப்புக்காவலில் உள்ள ஹரக்கட்டாவுடன் ஒருசில பொலிஸ் அதிகாரிகள் தொடர்புக் கொண்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தியினால் தனது உயிர் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாகவும், அது குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸ்மா அதிபர் குழுவில் வலியுறுத்தினார்.

இதன்போது கருத்து தெரிவித்த நீதியரசர் பி.பி சூரசேன, பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் குறித்து குழுவினால் அறிவிக்க முடியாது என்றும், குழுவின் செயற்பாடுகளை அறிக்கையிடும் ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று ஊடகங்களிடம் வலியுறுத்தினார்.

இச்சந்தர்ப்பத்தில் பிரதிவாதியான தேசபந்து தென்னகோனுக்கும், மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் ஜனாதிபதி சட்டத்தரணி திலிப பீரிஸ்'க்கும் இடையிர் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

பொலிஸ்மா அதிபரை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி என்று குறிப்பிடுவதால் அவருக்கு பாதிப்பு ஏற்படும் என்று சட்டத்தரணி சஞ்சய வீரவிக்ரம இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி சட்டத்தரணி 'இவர் பாதாள குழுவை காட்டிலும் பயங்கரமானவர், ஹரக்காட்டாவும் அச்சமடைவார்' என்று கடுமையாக சாடினார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் 'இவர் என்னை மிகவும் கீழ்த்தரமான முறையில் இந்த குழுவிலும், மாத்தறை நீதவான் நீதிமன்றத்திலும் பேசுகிறார், அவசியமாயின் எனக்கும் இவரை பற்றி குறிப்பிட முடியும்' என்று குறிப்பிட்டார். முன்வைக்கப்படும் அனைத்து கூற்றுகளுக்கும் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை. ஒழுக்கமான முறையில் குழுவில் நடந்துக் கொள்ளுமாறு குழுவின் தலைவர் நீதியரசர் பி.பி.சூரசேன இதன்போது வலியுறுத்தினார்.

இதன்போது தனது கருத்தை முன்வைத்த ஜனாதிபதி சட்டத்தரணி திலிப பீரிஸ்' ஒருசில சாட்சியங்களை பிரதிவாதி தரப்புக்கு வழங்க முடியாது' என்று குறிப்பிட்டார்.

இருதரப்பின் கருத்துக்களையும் ஆராய்ந்த சிறப்பு குழு, பிரதிவாதி தரப்புக்கு ஒருசில சாட்சியங்களை பரிசீலனை செய்வதற்கு அவற்றை வழங்குமாறு அறிவுறுத்தியது.

## இந்தியாவுடனான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈட்டுகின்றன. தற்போதைய ஆளும்தரப்பின் வரிக் கொள்கையில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் காரணமாக தேசிய சீனி உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் இந்தத் தொழிற்சாலைகள் கடுமையான சவால்களை எதிர்கொள்கின்றன. தேசிய சீனி உற்பத்தியின் தற்போதைய நிலைமை, இறக்குமதி வரிக் கொள்கைகள் பல சிக்கல்களைக் கொண்டுள்ளன. அதன் பிரகாரம் இது குறித்து ஆளும்தரப்பிடம் பின்வரும் கேள்விகளை முன்வைக்கிறேன்.

இலங்கையில் தற்போது இயங்கும் லங்கா சீனி உற்பத்தி நிறுவனத்திற்குச் சொந்தமான சீனி தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்? ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஆண்டுக்கு உற்பத்தி செய்யப்படும் அளவு யாதென்பதையும் ? நாட்டின் வருடாந்த சீனித் தேவையில் இந்த உற்பத்தி எத்தனை சதவீதத்தை குறிக்கிறது என்பதையும் குறிப்பிட முடியுமா?

இதன் பிரகாரம், ஆண்டுதோறும் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் சீனியின் அளவு யாது? இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு கிலோ சீனிக்கும் விதிக்கப்படும் வரி யாது ? அது எவ்வளவு ?

தேசிய ரீதியாக உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு கிலோ சீனிக்கும் விதிக்கப்படும் வரி எவ்வளவு? இறக்குமதி செய்யப்படும் சீனி வற் வரிவிதிப்பில் இருந்து விடுவிக்கப்படுவதற்கும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சீனிக்கு வற் வரிவிதிப்பிற்கு உட்படுவதற்கும் ஏதுவான காரணம் யாது ?

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் சீனிக்கு 50 ரூபா அறவிடப்படுகிறது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சீனிக்கு 18 வீத பெறுமதி சேர் வரி விதிக்கப்பட்டுள்ளது. இதனால் உற்பத்தி செலவு 237 ரூபா ஆக அமைந்து காணப்படுகிறது. இது சந்தையில் 175 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. அதனால் பெரும் நட்டத்தை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் தேசிய சீனி உற்பத்திக்கு ஏன் தொடர்ந்தும் 18 வீத வரி அறிவிட வேண்டும் என கேட்கிறோம்

லங்கா சீனி நிறுவனத்துக்குச் சொந்தமான சீனி உற்பத்தி தொழிற்சாலைகள் நட்டத்தில் இயங்குகின்றன என்பதை ஆளும்தரப்பு ஏற்றுக்கொள்கின்றதா? இந்த தொழிற்சாலைகள் இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக கொண்டு வர தற்சமயம் ஆளும்தரப்பு அவதானம் செலுத்தியுள்ளதா ? இதற்காக ஆளும்தரப்பு வகுத்துள்ள திட்டம் என்ன?

எமக்கு கிடைத்துள்ள தகவல்களின்படி, கல் ஓயா 17 பில்லியன் ரூபா, எதிமலே 7 பில்லியன் ரூபா, பெல்வத்த 10 பில்லியன் ரூபா என்ற அடிப்படையில் நஷ்டமடைந்துள்ளன. செவனகல சீனி தொழிற்சாலையை மீண்டும் புனர்நிர்மாணம் செய்யவேண்டும். இந்த நட்டங்கள் தொடர்பில் ஆளும்தரப்புத் தரவுகளை சமர்ப்பிக்க முடியுமா? இந்தத் தொழிற்சாலைகளை இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்றுவதற்கான திட்டம் என்ன?

சீனி உற்பத்தியின் துணைப் பொருளான எத்தனோல் விற்பனையில் நஷ்டம் ஏற்படக் காரணம் என்ன ? இவ்வாறு நஷ்டம் ஏற்படுவதை குறைக்க ஆளும்தரப்பு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

இன்று ஒரு லீற்றர் எத்தனோல் 450 ரூபா முதல் 475 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் உற்பத்தி செலவு 628 ரூபா. 750 ரூபா ஆக அமைந்து காணப்படுகிறது. குறைந்தபட்ச விலை 800 ரூபா ஆக அமைந்து காணப்பட வேண்டும். கடந்த ஆண்டு விற்பனை விலை 1,500 ரூபா ஆக அமைந்து காணப்பட்டது. எத்தனோல் மீது கவனம் செலுத்தவில்லையாயினும், அது ஒட்டுமொத்த உற்பத்தி செயல்பாட்டில் முக்கியமானதாக அமைந்து காணப்படுகிறது. ஊவா வெல்லஸ்ஸ மக்களின் வாழ்க்கையுடன் இது தொடர்புடையதாகும்.

மேலும், சீனி இலாபத்தில் 30 வீதம் வரியாக அறவிடப்படுகிறது. எத்தனோல் இலாபத்தில் 45 வீதம் வரியாக அறிவிடப்படுகிறது. மேலும், ஒரு மெட்ரிக் டொன் மொலாசஸுக்கும் 10,000 ரூபா வரி விதிக்கப்படுகிறது. இதனால் இறுதியில் விவசாயிகளே பாதிக்கப்படுகின்றனர்.

எனவே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சீனி மற்றும் எத்தனோல் மீது விதிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரிகளை நீக்குவதன் மூலம் லங்கா சீனி நிறுவனத்துக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் எதிர்நோக்கும் நஷ்டத்தை குறைத்துக் கொள்ள முடியும் என்பதை ஆளும்தரப்பு ஏற்றுக் கொள்கிறதா? எதிர்காலத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சீனி மற்றும் எத்தனோல் மீது விதிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரிகளை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? இல்லையென்றால் ஏன்? என கேட்கிறேன் என்றார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தரவு பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச் )சட்டமூலம் தொடர்பில் தொழில்நுட்பமட்டத்தில் விசேட அவதானம் செலுத்தப்படுவதை போன்று ஜனநாயக அம்சங்கள் குறித்தும் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்று ஏனெனில் இன்று எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் நாளை அரசாங்கத்துக்கு வரலாம், அரசாங்கம் எதிர்க்கட்சிக்கு செல்ல நேரிடும்.

2022 ஆம் ஆண்டு தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டமூலம் நாடாளுமன்றத்துக்கு முன்வைக்கப்பட்ட போது தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அன்று கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார். தரவு பாதுகாப்பு அதிகாரசபை ஒன்றை நிறுவன வேண்டும். இதற்கான நியமனங்கள் அரசமைப்பு பேரவையால் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு பல திருத்தங்களை முன்வைத்தார்.

மக்கள் விடுதலை முன்னணி அன்று குறிப்பிட்ட தரவு பாதுகாப்பு அதிகார சபை இன்று முன்வைக்கப்பட்டுள்ள தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலத்தில் உள்வாங்கப்படவில்லை. இந்த சட்டமூலம் ஜனநாயகத்துக்கு முற்றிலும் எதிரானதாக அமையும்.

மக்கள் விடுதலை முன்னணியினர் முற்பிறவியில் வித்தைக்காரர்களாக இருந்திருப்பார்களா என்று தெரியவில்லை ஏனெனில் சந்தர்ப்பத்துக்கு ஏற்றாட் போல் (பல்டி) குத்துக்கரணம் அடிக்கிறார்கள். ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் குறிப்பிட்டது ஒன்று, தற்போது செய்வது பிறிதொன்று. இந்த சட்டமூலத்துக்கு பல திருத்தங்களை நாங்கள் முன்வைப்போம் என்றார்.

## ஐக்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பின் நாமம் ( பெயர்) ரஜ உப்பு என்று குறிப்பிடப்படுகிறது. முழு சந்தைக் கட்டமைப்பையும் கைப்பற்றுவதற்காகவே இந்த பெயர் நாமம் பயன்படுத்தப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு பிரதிநிதிகளின் வலியுறுத்தலுக்கு அமைய ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பினை 'ஆனையிறவு உப்பு' என்று குறிப்பிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு தரப்பினர் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக ஒரு தரப்பினரை தவறாக வழிநடத்தியுள்ளார்கள். உப்பளத்தில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து தொழிலாளர்களுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஆனையிறவு உப்பு தொழிற்சாலைக்கு அரசியல் பரிந்துரைகளுடன் நியமனங்கள் வழங்கப்படவில்லை. முறையான வழிமுறைகளுக்கு அமைவாகவே நியமனங்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே அரசியல் தலையீடு உள்ளது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆனையிறவு உப்பள தொழிற்சாலையின் ஒருசில சேவையாளர்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த போராட்டத்தால் உப்பு உற்பத்திக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.. தொழிலாளர்களின் நலன்புரி திட்டங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றார்.

## கொழும்பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படுகிறது.

2009 ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களில் மேலும் 16,759 வீடுகள் நிர்மாணிக்கப்பட வேண்டும் என இனங்காணப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்தின் ஆரம்பத்தில் 550 சதுர அடி வீடுகளை அமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை 1,100,000 ரூபாவாகும். மற்றும் 340 சதுர அடி வீடுகளை அமைப்பதற்கு 650,000 ரூபா எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், கட்டட நிர்மாண மூலப்பொருட்களின் தற்போதைய விலைகளுக்கு அமைய 550 சதுர அடி வீடுகளை அமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை 1,600,000 ரூபாவாகும். 340 சதுர அடி வீடுகளை அமைப்பதற்கு 950,000 ரூபா எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2025 ஆண்டிலிருந்து அமுலாகும் வகையில் நிரந்தர வீடமைப்பு திட்ட பயனாளி நிர்மாணிக்கும் அடிப்படையில் அரசினால் வழங்கப்படும் உதவிப் பணத்தை பின்வரும் வகையில் அதிகரிப்பதற்கு நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

550 சதுர அடி வீடுகளை அமைப்பதற்காக அரச நிதியில் வழங்கப்படும் உதவிப் பணத்தை 1,500,000 ரூபா வரை அதிகரிப்பதற்கும், 340 சதுர அடி வீட்டினை அமைப்பதற்காக அரச நிதியில் வழங்கப்படும் உதவிப் பணத்தை 900,000 ரூபா வரை அதிகரிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## ஷ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியன தரப்புக்கள் உள்ளூராட்சி சபைகளில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஒரு கொள்கைக் கூட்டை ஏற்படுத்தியிருப்பதாக அறிவித்திருப்பது குறித்து அவரிடம் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"அவர்கள் கொள்கைக் கூட்டைத்தானே அறிவித்திருக்கிறார்கள்" என்றார் அவர்.

"தமிழ் அரசுக் கட்சி ஏற்கனவே ஒரு கொள்கை முடிவை எடுத்து அறிவித்திருந்தது. வடக்கு கிழக்கில் உள்ள சபைகளில் தமிழ் பேசும் கட்சி ஒன்று அதிக ஆசனங்களைக் கொண்டிருந்தால் அது ஆட்சியமைப்பதற்கான உரிமையை கொண்டிருக்கும் என்பதை ஏற்றுக்கொள்வது, ஆதரிப்பது என்பதே அந்தக் கொள்கை முடிவு.

எமது அந்த முடிவை ஆதரிப்பதாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் ஏற்கனவே அறிவித்திருந்தனர். தமிழ் அரசுக் கட்சியின் முடிவை ஆதரிப்பதாகவும் அவர்கள் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தனர். அந்தக் கூட்டணியின் தலைவர்கள் எம்மோடு நேரில் பேசும்போதும் அதனையே தெரிவித்திருந்தனர். அதற்கு மேலதிகமாக தமதக்குச்சாதகமான சில கோரிக்கைகளையும் அவர்கள் முன்வைத்திருந்தனர். அது குறித்துப் பரிசீலித்த பின்னர் கருத்துத் தெரிவிப்பதாக நாம் தெரிவித்திருந்தோம். அதற்கிடையில் அவர்கள் சைக்கிள் கூட்டணியுடன் ஒரு கொள்கைக் கூட்டுக்குப் போவதாக அறிவித்துள்ளனர்.

சைக்கிள் கூட்டணியும் தமிழ் அரசுக் கட்சியின் கொள்கை முடிவை ஏற்கனவே தாமாகவே ஏற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளனர். அவர்களாகவேதான் அதனை அறிவித்தனர். அதனடிப்படையில்தான் அதன் தலைவர் கஜேந்திரகுமார், செயலாளர் கஜேந்திரன் ஆகியோரை நாம் நேரில் சந்தித்தும் பேசினோம். அப்போதும் அவர்கள் சபைகளில் அதிக ஆசனங்களைக் கொண்டுள்ள தமிழ்க் கட்சி ஆட்சியமைக்க ஆதரவளிப்போம் என்றே தெரிவித்திருந்தனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளின் ஆசனப்பட்டியல் தேர்தல் முடிவுகளில் தெளிவாக உள்ளது. அதனடிப்படையில் எந்தெந்தத சபைகளில் எந்தெந்தத் தமிழ் பேசும் கட்சி அதிக ஆசனங்களைக் கொண்டிருக்கிறதோ அந்தக் கட்சி அந்தச் சபையில் ஆட்சியமைப்பதை ஏற்றுக்கொள்வது, ஆதரிப்பது என்கிற எமது கொள்கை முடிவில் எந்த மாற்றமும் இல்லை. அதற்கமைய தமிழ் அரசுக் கட்சி அதிக ஆசனங்களைக் கொண்டுள்ள சபைகளில் எல்லாம் அது ஆட்சியமைக்கும் உரிமையை நிலைநாட்டும். அந்தந்தச் சபைகளில் எல்லாம் நாம் எமது வேட்பாளர்களைத் தலைமைப் பதவிக்கு நிறுத்துவோம்.

எமது கொள்கை முடிவுவை ஏற்று ஆதரிப்பதாகத் தாமாகவே அறிவித்தவர்கள், அதற்கு மாறாகச் செயற்பட்டால் அப்போது நிலமைக்கு ஏற்ப அந்தந்தச் சபைகளில் எப்படிச் செயற்படுவது என்ற வியூகத்தை தமிழ் அரசுக் கட்சி வகுக்கும். இபோதைக்கு அவர்கள் கொள்கைக் கூட்டு என்றுதானே அறிவித்திருக்கிறார்'' என்று சமந்திரன் தெரிவித்தார்.



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்




உள்ளக வசதிகள்
- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்

0777 43 55 57



முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி04.06.2025இல் வெளியிடப்பெற்றது